# வீதி ஒழுங்கு

பாடம் 3

வஜீஹா:- அஸ்ஸலாமு அலைகும் கரீமா.

கரீமா:- வஅலைகுமுஸ்ஸலாம் வஜீஹா. வாருங்கள் வாருங்கள்.

வஜீஹா:- இன்று இஸ்லாம் பாடத்தில் ஏதாவது படித் திருப்பீர்களே.

கரீமா:- வீதி ஒழுங்கு பற்றி நாம் இன்று படித்தோம்.

வஜீஹா:- அது பற்றிக் கூற முடியுமா?

கரீமா:- ஒருமுறை ஸஹாபாக்கள் சிலர் வீதியில் கூடி நின்று கதைத்துக் கொண்டிருந்தார்கள். இதனைக் கண்ட நபி(ஸல்) அவர்கள், "பேசிக் கொண்டிருப்பதற்கு உங்களுக்கு வேறு இடம் கிடைக்கவில்லையா" ? என்று கேட்டார்கள். பின்னர் "வீதிக்குரிய உரிமையைப் பாதுகாத் துக் கொள்ளுங்கள்" என்றார்கள். அப்போது "வீதிக்குரிய உரிமை என்றால் என்ன"? என்று ஸஹாபாக்கள் கேட்டார்கள். "வீதி ஒரு பொதுச் சொத்து. பலருக்கும் உரித்தானது. அதனைப் பயன்படுத்துபவர்களுக்கு நாம் இடைஞ்சலாக இருக்கக்கூடாது" என்று நபி (ஸல்) அவர்கள் விளக்கம் கொடுத்தார்கள்.

வஜீஹா:- ஆம். பாதையில் செல்பவர்களுக்கு நாம் பல இடைஞ்சல்களைச் செய்து கொண்டுதான் இருக்கின்றோம். இது பற்றி ஆசிரியை என்ன கூறினார்?

கரீமா:- வீதியில் பழத்தோல்களை எறிவது, குப்பைகளைக் கொட்டுவது, மரக்கிளைகளை வெட்டிப் போடுவது, மலசலம் கழிப்பது, கழிவுநீரைக் கொட்டுவது, செத்த பிராணிகளைப் போடுவது அல்லது வீசுவது, கூடி நின்று கதைத்துக் கொண்டிருப்பது போன்ற தவறான செயல்களை விட்டுவிட வேண்டும் என்றார்.

வஜீஹா:- வேறு ஏதாவது சொன்னார்ரா?

கரீமா:- ஆம். வீதி எமக்கு மட்டும் சொந்தமானதல்ல. ஆதலால், நாம் வீதியின் சில ஒழுங்குகளைப் பேண வேண்டும் என்றார்.

வஜீஹா:- என்ன ஒழுங்குகள்?

கரீமா:- வீதியில் வலது பக்கமாக நடந்து செல்ல வேண்டும். வீதியைக் கடக்க நேரும்போது இருபக்கமும் பார்த்துக் கடக்க வேண்டும்.

வீதியைக் கடப்பதற்கு பாதையில் மஞ்சள் நிறக்கோடுகள் போடப்பட்டுள்ளன சுரங்கங்



கள், மேம்பாலங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவ்வாறிருந்தால் நாம் அவற்றையே பயன் படுத்த வேண்டும். பலருடன் கைகோர்த்துக் கொண்டு செல்லல், விளையாடிக் கொண்டு செல்லல், சாப்பிட்டுக் கொண்டு நடத்தல், விளம்பரங்கள் போன்றவற்றை வாசித்துக் கொண்டு நடத்தல், வீதியில் செல்வோரைக் கேலி பண்ணல், பிறர் மீது முட்டி மோதிக்

கொண்டு செல்லல் போன்றவற்றைத் தவிர்த்துக் கொள்ளல் வேண்டும் என்றார்:



வஜீஹா:- வீதியில் செல்வோருக்கு உதவி செய்வது பற்றி ஏதாவது கூறினாரா?

கரீமா:- ஆம், வீதியில் செல்லும் பலர் மற்றவரின் உதவியை எதிர்பார்த்து நிற்கின்றார்கள். சிறுவர், அங்கவீனர், உதவி தேவைப்படுபவர்கள் போன்ற பலர் அவர்களில் அடங்குவர். அப்படிப்பட்டவர்களுக்கு வீதியில் நடந்து செல்வதற்கும் பாதையைக் கடப்பதற்கும் நாம்

உதவி செய்தே ஆக வேண்டும்.

வஜீஹா:- வாகனத்தில் செல்லும் போது எப்படிச் செல்ல வேண்டும் என்று கூறவில்லையா?

கரீமா:- கூறினார். வாகனத்தில் பிஸ்மில்லாஹ் என்று கூறி வலதுகாலை முன்வைத்து ஏற வேண்டும் யன்னல் வழியாகக் கைகளை வெளியே நீட்டக் கூடாது; எட்டிப்பார்க்கக்கூடாது; பொருள்களை வீசக் கூடாது; எச்சில் துப்பக் கூடாது. பொது வாகனங்களில் பயணம் செய்யும்போது காலியாக இருக்கும் ஆசனங் களில் ·அமர வேண்டும். கதவருகில் நிற்ப தைத் தவிர்க்க வேண்டும். கதைக்க வேண்டி ஏற்பட்டால் மற்றவர்களுக்கு இடைஞ்சல் ஏற்படாதவாறு மெதுவாகக் கதைக்க வேண்டும்; நோயாளர், வயோதிபர், கர்ப்பிணி கள், அங்கவீனர்கள் போன்றோர் வாகனத் தில் ஏறினால் அவர்களுக்கு இருக்க இடமளிக்க வேண்டும் என்றும் கூறினார்.

வஜீஹா:- வாகனம் புறப்பட்டதும் ஓதவேண்டிய துஆ ஒன்று இருக்கிறதே.



கரீமா:- ஆம். அதையும் சொல்லித் தந்தார்கள்.

வஜீஹா:- அப்படியானால் இன்று அதிகமான விடயங்களைப் படித்திருக்கிறீர்கள்.

கரீமா:- ஆம் வஜீஹா.

வஜீஹா:- இன்று உங்களிடம் அதிகமான விடயங்களைத் தெரிந்து கொண்டேன். ஜஸாகல்லாஹு கைரன்.

**இஸ்லாம் காட்டிய வீதி ஒழுங்குகளைப் பேணுவோம்.**

## பயிற்சி

**பின்வருவனவற்றுள் சரியான கூற்றுக்கு " √ " அடையாள மிடுங்கள்.**

1. நபி(ஸல்) அவர்கள் வீதிக்குரிய உரிமையைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள் என்றார்கள். ☐
2. வீதியில் பேசிக் கொண்டிருப்பதற்கு நபி(ஸல்) அவர்கள் அனுமதியளித்தார்கள். ☐
3. வீதி ஒரு பொதுச் சொத்தாகும். ☐
4. நாம் பாதையில் செல்பவர்களுக்கு இடைஞ்சலாக இருக்கக்கூடாது. ☐
5. வீதியில் குப்பைகளைக் கொட்டக்கூடாது. ☐
6. செத்த பிராணிகளை வீதியில் விட்டு வைக்கலாம். ☐
7. வீதியில் வலப்பக்கமாக நடக்க வேண்டும். ☐
8. வீதிக் கடவைகளால் மாத்திரமே வீதியைக் கடக்க வேண்டும். ☐
9. வீதியில் நடந்து கொண்டிருக்கும் பலவீனர் களுக்கும் உதவி செய்ய வேண்டும். ☐
10. வீதியில் ஆடிப்பாடிக் குதூகலமாக நடந்து செல்ல வேண்டும். ☐